மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.99/2021</u>

2025ம் ஆண்டு ஆகஸ்ட் 25ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இளங்கோ | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>25.08.2025 வா.சா.2 சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் 3ம் தரப்பினர் ஆவேன். இந்த வழக்கிற்காக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை ஏதேனும் வந்ததா என்றால் இல்லை. என்னை சாட்சியம் அளிக்க யார் அழைத்தார்கள் என்றால் கோவிந்தசாமி அழைத்தார். எனக்கு கோவிந்தசாமியை எப்படி தெரியும் என்றால் வெள்ளறை பாறையில் வேலை செய்து வந்தார் அதனால் எனக்கு தெரியும். கோவிந்தசாமி

தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது அவருடன் எத்தனை பேர்கள் பிறந்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. கோவிந்தசாமி உடன் பிறந்தவர்களில் தற்போது யார் யார் உயிரோடு உள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. கோவிந்தசாமி தற்போது எங்கு வசித்து வருகிறார் என்றால் சிவன் மலையில் வசித்து வருகிறார். இந்த வழக்கை யார் யார் சேர்ந்து தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம் சேமலை போயர் என்பவர் எப்போது இறந்தார் என்ற விவரம் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல தெரியும். தேதி மாதம் நினைவில்லை. சேமலை போயர் எந்த ஊரில் வைத்து இறந்தார் என்றால் அது எனக்கு தெரியாது சேமலை போயர் என்பவருக்கு எந்த சர்வே எண்ணில் எந்த ஊரில் எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்றால் புல எண் 908/2 புல எண்ணில் வீரனம்பாளையம் கிராமத்தில் சுமார் 10-¾ ஏக்கர் நிலம் உள்ளது அந்த சொத்து சேமலை போயர் என்பவருக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் அது எனக்கு தெரியாது புல எண்.908/1 யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்தை குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றும் வாதி சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் புல எண்.908/2 ல் சொத்துக்கள் உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3. புல எண்.908/2 ன் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது புல எண்.908/2 மானாவாரி பூமி என்றால் அது எனக்கு தெரியாது. புல எண்.908/2 ல் எத்தனை வீடுகள் உள்ளது எத்தனை சர்வீஸ் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும் இரண்டு சர்வீஸ்கள் உள்ளது. ஒரு வீடு உள்ளது சர்வீஸ் எண் எனக்கு நினைவில் இல்லை அந்த வீட்டின் கதவு எண் எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொல்வது

போல் மேற்படி பூமியில் வீடோ சர்வீஸ் எண்களோ இல்லை என்றும் அதனால் தான் அது பற்றி எனக்கு தெரியாது என நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

4. 2010 ஆம் ஆண்டு பிரதிவாதிகள் வாதிகளின் சொத்தையும் சேர்த்து ஆவணம் எழுதிக் கொண்டதாக நான் சொல்லி உள்ளேன் அது என்ன ஆவணம் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தை பைசல் செய்து கொடுக்கச் சொல்லி வாதிகள் பைசல் பேசியதாக சொல்லி உள்ளேன் என்றால் பைசல் எதுவும் பேசவில்லை தாவா சொத்திற்கு வடபுறம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளதாக சொல்லி உள்ளேன் அது எதன் அடிப்படையில் பாத்தியம் என்றால் அது எனக்கு தெரியாது.

5. பிரதிவாதி சொத்துக்களின் விஸ்தீரணம் மற்றும் காலையில் ஆகியவை எனக்கு தெரியாது என்றால் ஆமாம். தாவா சொத்துக்களை பற்றியோ அதன் அதனை சுற்றியுள்ள சொத்துக்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றும் வாதிகள் சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது சாட்சியம் நிராகரிக்கதக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.08.25 18:23:09 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்.